# இந்து மதம் எழுந்த வரலாறு

Phone No. 4502 Regd. No. M. 5458

விலை அரை அணு

# மாலை மணி

ஆசிரியர்: C. N. அண்ணதுரை M.A. MALAI MANI

( திராவிடர் தமிழ்த் தினசரி - கருத்திதழ் )

மலர் 1 ] சென்னை (8—10—49) வெளியீடு (9—10—49) [ இதழ் 60

## சரவபல்லியார் தரும் தகவல்

### ஆரியர் - திராவிடர் மோதுதலுக்கு ஆதாரங்கள் உண்டு

—(0)—

### நாமக்கல்லாரினும் நன்கு கற்றவர் இராதாகிருஷ்ணனர்

—(0)—

### நமக்குக் கிடைத்துள்ள தார்மீக வெற்றி

"இரு கலாசாரங்களுக்கும்—இரு நாகரிங்களுக்கும்—இரு குழுவினர்களுக்கும்-இடையில் மோதுதல ஏற்பட்டால், அதன் எதிரொலியாகப், போர், முட்டுக்கட்டை, மன ஒற்றுமையோடு நடத்தல் என்னும் விளைவுகள் ஏற்பட்டுத்தான தீரும்."

"இந்தியாவில் ஆரியர்களும் திராவிடர்களும் சந்தித்த பொழுது, இருவர் இடையும் மோதுதல் ஏற்பட்டது. இமமோதுதல, ஹிநது மதத தோற்றத்தால் முடிவிற்குக் கொண்டுவரப்பட்டது. ஹிநதுமதம, ஆரியமும்—திராவிடமும் சேர்ந்ததல்ல. வேறு புதிதாக முளைததாகும். இருநாகரிங்களின் மோதுதலால், நன்மை ஏறபட வேண்டுமானல், அகிம்சா முறையில், ஒருவர் மனத்தை மற்றொருவர் அனபால் அறிநது, மோதுதலைத் தீர்த்துக் கொள்ளவேணடும்."

'இனப் பிரச்சினையைப் பேசாதீர், சட்டத்தைஏவி சங்கடத்தை விளைவிபபோம் எச்சரிக்கையாக நடந்து கொள்ளுங்கள்' என்று ஆளவந்தாகளின் ஆர்ப்பாட்டம் கிளம்புகிறது, நாம் ஆரியர்—திராவிடர் என்று சில பல தக்க ஆதாரங்களுடன் பேசுகிற பொழுது

'ஆரியாவது — திராவிடராவது? வெறும் மயக்கம், வீணர்கள் வாயுரை' என்று பாட்டு மொழியால், பகர்வதாக நினைத்துக்கொண்டு, நாமக்கல்லார் கூட, நம்மை நக்கல் செய்கிறார். தடித்த நாவின துணை கொண்டு.

'எடு அகறகு ஆதாரம்; அகச்சான்றும் புறச் சான்றும்கூட உண்டு ஆரியர்-திராவிடர் மோதுதலுக்கு' என்று நாம் மறுக்க முடியாத, அணித்தரமான வரலாறறுச் சுவடிகளைக் காட்டி விவாதித்தாலும், 'விதண்டாவாதிகள்—பிளவு பெருக்கிகள்' என்று நாம் பழித்து இழித்துப் பேசபபடுகிறோம், சில கிரட்சர குட்சிகளால!

'ஹிந்து மதம் உண்மையில் ஓர் மதம் அன்று. நாம் ஹிந்துக்களும் அல்லர். திராவிடக் கலாசாரத்தையும் நாகரிகத்தையும் சிதழிகக என ஆரியா ஏறபடுத்திக்கொண்ட ஒரு ஏற்பாடுதான் அது' எனறு நாம் பல முறை. தக்க எடுததுககாட்டுகள மூலம் உறுதி செய்து இருக்கிறோம் அக்கருத்துக்குக் கிடைக்கக் கூடிய அளவிற்கு வெற்றி கிடைக்கவிலலையே என்றும் நாம் வேதனைப்பட்டிருக்கிறோம். இருந்தாலும் நமது சொல் என்றைக்கிருந்தாலும் வெல்லும் என்று நாம்,அசைக்க முடியாத நம்பிககை கொண்டு இருப்பதால், நமது கோட்பாட்டிலே நமக்கு அவநம்பிக்கையோ, நமது பணியிலே சோர்வோ இதுவரை நமக்கு ஏற்பட இடமில்லாமல் இருககிறது.

'ஆரியர்- திராவிடர்' உண்மைகளை நாம் எடுத்துக் காட்டிய பொழுதும், 'ஹிந்துமதத் தோறறத்தின் காரணத்தை நாம் கண்டு கூறியபொழுதும், சீறியெழுந்து கோபித்த குணசீலர்களுக்கு, நமக்கு ஆதாரமாகக் கிளம்பியுள்ள கருத்தோவியம் ஒன்றை, முகப்பில் பொறித்துள்ளோம். படித்துப் பார்க்கட்டும், நம்மீது பாயந்து வநம் 'பாரதமாதா'வின் புதல்வர்கள்!

கூறினது ஒரு ஆங்கிலேயர் அல்ல- அவர்தான் 'பிரித்தாள்வதிலே' கருத்துடையவர் ஆயிற்றே! வேறு ஐரோப்பியர் அல்ல- நமது நாகரிகத்தை அவரால் புரிந்துகொள்வதே முடியாததாயிற்றே! ஹிராஸ் பாதரியாரா- அவருக்குத்தான் திராவிடர் நாகரிகத்திலே தணியாக் காதலாயிற்றே! இவர்கள் பேசசுக்களை எல்லாம் ஒதுக்கித் தள்ளிவிடத்தான் வேண்டும்!

சர். இராதாகிருஷ்ணன் 'திராவிடர்-ஆரியர் மோதுதல்' பற்றிக் கூறியுள்ளார். பாரிசில் பல படித்தவர்கள் முன்னிலையில் பேசியுள்ளார் நாமக்கல்லார் தெரிந்திருப்பதைக் காட்டிலும். இராதாகிருஷ்ணனருக்குத் தெரியும் அதிகம் அவர் அறிந்துள்ளதைக் காட்டிலும், அந்த அவையில கூடியிருந்த நானூறு நண்பர்களில் இரண்டொருவருக்காவது, 'ஆரிய—திராவிடர்' உண்மை தெரிந்திருக்கும். சரவப்லலியார், 'ஆரியர்- திராவிடர்' மோதுதல் குறித்து அங்கு பேசினபொழுது, அவர் கூறறுத் தவறுடையதாக இருந்திருக்குமானல, மறுத்திருப்பார் அங்குக் கூடியிருந்த அறிஞர்கள். 'நமக்கேன் ஊர் வம்பு' என்று 'பொய்யுரை புகழ்பாபபப் பார்த்துக்கொண்டு இருக்கும் 'பெரும உள்ளம்' படைத்தவர்கள் அல்லர் பிரெஞ்சுப் பேராசிரியாகள். வெட்டிப் பேசிஇருப்பர், இராதாகிருஷ்ணனர், 'ஆரியர்—திராவிடர்' பேதம் பற்றி விளக்க முனைந்த போது. தட்டிக் கேட்டிருப்பர், சுட்டிக் காட்டி இருப்பர், இந்தியத் தூதுவரின் சித்திரச் சொற்களில் செம்மை இல்லாது இருந்திருக்குமானல். 'ஆரியர்—திராவிடர்' மோதுதல் குறித்து இந்தியக் தத்துவ சாஸ்திரியார் கூற, ஆமோதித்து இருந்தனர், பாரீஸ் அவையில கூடி இருந்த அறிஞர்கள்.

ஆரியர் வேறு இனம்—திராவிடர் வேறு இனம். ஆரியர் கலாசாரம் வேறு—திராவிடர் கலாசாரம் அதற்கு முரணனது நாகரிகத்திலும் இதே மாறுபாடுதான். மோதுதல் நிகழ்கிறது ஒன்றை ஒன்று விழுங்க முனைகிறது. வீரம் செல்லாத இடத்தில், தோல்வியுறும் கட்டத்தில, விவேகம் வெளிக் கிளம்புவதும்—அதுவும் வஞ்சனை உரு

தொடர்ச்சி 4-ம் பக்கம் பார்க்க

## காஷ்மீர் சிங்கத்திற்கு!

"அடிமைப்பட்ட நாட்டில் ஒரு சுதந்திர புருஷராக காந்தியார் இருந்துவந்தார். தனி நபர்களால் மட்டுமேதான் அகிம்சாதத்துவத்தை மேற்கொள்ளமுடியும் என்பதில்லாமல், ஒரு கூட்டத்தினரும், ஒரு நாட்டினரும் கூட அகிம்சா தத்துவத்தைச் செயலாற்ற முடியுமென்பதை, அவா மெய்ப்பித்துக்காட்டியுள்ளார். சிக்கல்களைத் தீர்த்துககொள்வதற்கு, அகிமசை மார்க்கம் ஒன்று இருக்கிறது"

"வாழ்க்கையே நெருக்கடிகள் நிறைந்ததாகும். அதுவும் தற்கால உலகில், கொலைத்திறம் மிக்கக் கருவிகள் கண்டுபிடிக்கப்பட்டு இருக்கையில, சிக்கல்கள் போராக மூண்டுவிட்டால். மனித வர்க்கத்திற்கே படுநாசம் ஏற்பட்டுவிடும. இத்தகைய நெருக்கடிகளைத தீர்த்துக்கொள்ள மனித இனம் மேற்கொள்ளக் கூடிய பாதையை. காந்தியார், நமக்குக் காட்டியுள்ளார்."

சர் இராதாகிருஷ்ணன்.

## பசிவந்திடப் பத்தும் பறக்கும்!

### பசிப்பிணி போக்கும் மருந்து உடனடியாகத் தேவை

மானம், கல்வி, பெருமை முதலிய மனிதனுக்கு உயர்வளிக்கும் 10 வகைக் குணஙகளும் பசியால் (வறுமையால்) துன்புற நேருஙகால் மனிதனை விட்டுப் பறந்துவிடும் என்பது தமிழ்நாட்டு மூதுரைகளுள் ஒன்று. வறுமை (பசி) கொடுமையால்தான் நல்ல மனிதனும் தீயவனுகி விடுகின்முன். இன்று நாட்டிலே பசிக்கொடுமை தாஙக முடியாத அளவுக்குப் பெருகிவிட்டது. அதைப் போக்க உடனடியான முயறசிகள் ஒன்றும் எடுததுககொள்ளப்படவிலலை. அரிசி பற்றுக் குறையில் மக்கள் அவதிப்பட்டுககொணடிருக்கும் நிலையில், இப்பறறுக் குறையை நீக்க எடுத்துககொளளப்பட்டுள்ள முயற்சிகள் வெறறியளித்து, மக்களுக்குப் போதிய அளவு உணவுத் தானியஙகள விளைகின்றனவா என்பதை அறியா முன்னரே, மத்திய அரசாஙகம். வெளிநாடுகளிலிருந்து வரவழைககப்படும பொருள்களில் முதன் முதலாக நிறுத்தப்படப் போவது அரிசியே என்று அறிவித்துவிட்டது. மற்றப் பொருளகளையெல்லாம நிறுத்திவிட்டு, கோதுமை வரவழைப்பதையும் நிறுத்திவிட்டுக் கடைசியாக அரிசியை நிறுத்தலாமல்லவா? கோதுமை வடநாட்டவர் உணவு. ஆகவே அதை நிறுத்த மத்திய ஆட்சிக்கு மனமில்லை. நிறுத்தவும முடியாது. கோதுமை சாப்பிடுகிற பேர்வழிகள்தானே அஙகு ஆட்சிப் பீடத்தில் அமர்ந்துள்ளனர்! எனவேதான் முதலில் அரிசியை நிறுத்திவிடுவதென்று அந்தக் கோதுமைப் பேர்வழிகள் அறிவித்துள்ளனர். சென்னை மாகாண ஆட்சியாளர், தஙகள் செயலாளர்களின் விருப்பத்துக்குக குறுக்கே பேச முடியாதவர்களாகையால் ததாஸ்து பாடிக்கொண்டு சும்மா கிடக்கின்றனர்.

சும்மா கிடந்தாலும் பரவாயில்லையே! சென்னைமாகில உணவு அமைச்சர். மக்களிடையே நல்லொழுக்கப் பிரசாரம் நடத்தத் துவக்கிவிட்டார். பசிப்பிணிக்கு வழிதேடாமல் அதனைத் தடைசெய்த மத்திய அரசாஙக ஆட்சிப்பீடத்தை அதட்டிக் கேட்டு, நம் நாட்டு மக்களின் உணவைத் தடை செய்யாமல் காககமுயலாமல் நல்லொழுக்கப் பிரசாரம் செய்ய அமைச்சர்கள் முன்வருகின்றனரென்றால் நாட்டின் நிலை எவ்வளவு சீர்கேட்டிலிருக்கிறதென்பது விளஙகுகிறதா? நல்லொழுக்கப் பிரசாரத்திற்கு இவ்வளவு பெரும சமபளத்தில் அமைசசர்கள இருக்கவேண்டுமா? நலலொழுககம நாட்டில் நிலவவேண்டுமானல, மக்களின் வறுமைப்பிணி பசிப்பிணி முதலில் அகற்றப்பட வேண்டும். இவை அகறறபபடாத வரை மக்களிடை நல்லொழுக்கம ஏறபடாது என்பதை அமைசசர்கள் அறிவரா?

## அதிக வரி கொடுக்க அஞ்சாதீர்கள்!

### நடப்பது நமது அரசாங்கம்

சென்னை மாகில அரசாஙகத்து நிதி அமைச்சர் தோழர் கோபால் ரெட்டி, குற்றுலம் தாலுக்காக் காஙகிரஸ் கமிட்டி ஆதரவில் நடந்த கூட்டத்தில் பேசுகையில் "காஙகிரஸ் அரசாஙகம் மக்களுக்கு மதுவிலக்கு. ஜமீன் ஒழிபபு போன்ற நன்மைகளைச் செய்து விட்டபடியால். நீர்ப்பாசனம், மின்சாரம போன்றவற்றைக் கவனிக்கப் பெருவாரியாகத் தேவைப்படும் பணத்திற்காக மக்கள் முணுமுணுக்காமல் போடும் வரிகளையெலலாம கொடுத்தாக வேண்டுமென்றும் அதிக நவன்களை வேண்டுவோர் அதிக வரிகளைக் கொடுக்க அஞ்சக்கூடா"தென்றும் கூறினா

இப்போது நடைபெறுவது சுதந்திர ஆட்சி சுதந்திர ஆட்சியாளர் எவ்வளவு வரிபோட்டாலும் மக்கள் ஏனென்று கேட்கலாமா? எல்லாம் நம் நனமைக்காகத்தான் என்ற மரியாதையாகக் கொடுத்துவிட வேண்டும்.

நாட்டிலே மக்களுக்கு எந்தக் கஷ்டம் வந்தால் என்ன? உணவுப் பஞ்சமா? உடைப் பஞ்சமா? வீட்டுப் பஞ்சமா? எதுவாயிருந்த போதிலும சுதந்திர ஆட்சியில் அதையெல்லாம் கவனிக்கலாமா? பஞ்சம் எவ்வளவு கொடுமையிலிருந்தாலும் மக்கள் நிலை எனனவானலும், அரசாஙகம் எவ்வளவு வரிகளைப் புதிது புதிதாகப் போட்டாலும் மக்கள் முணுமுணுக்காமல், சுதந்திரநாடு என்பதை மனத்தில் வைத்துக் கேட்டதைக் கொடுத்துவிடுதல் வேண்டும் என்கிறார் சாந்திநிகேதனத்தில் பயின்ற நிதியமைச்சர்! நாட்டின் நிலைஇன்றுள்ள வகை இதுதான்.

# மாலை மணி

சென்னை 8—10—49 சனிக்கிழமை


# சென்னை நமதே!

“ஆசை யாரைவிட்டது” என்றோ பழமொழி கூறுவர், ஆசையின் தோற்றம் வெளிப் படையாகத் தெரியும்போது! அந்த ஆசை, சிலபொழுதில், சிலரிடம் பேராசையாகவும்-பொருந்தா ஆசையாகவும் வளர்ந்து விடுகிறது. அத்தகையதொரு நோய் இப்பொழுது ஆந்திரர்களைப் பிடித்து ஆட்டி அலக்கழித்து வருகிறது!

‘மதராஸ மனதே’ என்று ஆர்ப்பரித்தனர்— ‘மதராஸ மீதிகாது’ என்பதற்கு விளக்கங்கள் தரப்பட்டன. எனினும் அவர்கள் ஆர்ப்பாட்டம் குறையவில்லை— பேராசை அவர்கள் கண்ணையுங் கருத்தையும் அந்த அளவுக்கு மறைக்கிறது!

சென்னை தமிழருக்குத்தான்! முக்காலும் சரி- முழுமையும் சரி! வரலாற்றுச் சான்றுகள் அப்படித்தான் பகர்கின்றன; நிலநூல் அமைப்பு அதைத்தான் காட்டுகின்றது; மக்கள் எண்ணிக்கை அந்த நிலையைத்தான் உறுதிப்படுத்துகிறது; அங்கு எழும்பும் தமிழோசை அதைத்தான் மெய்ப்பிக்கின்றது. இவையனைத்தும் அறிந்த பிறகு, சென்னை எமக்குத்தான் என்று ஆந்திர அட்டகாசக்காரர்களிலே சிலர், நாளுக்கொரு யோசனையும், வேளைக்கொரு திட்டமும் கூறி வல்லடி வழக்குத் தொடுக்கிறார்கள் என்றால், அதில் நேர்மை கிடையாது; நீதிக்கு இடமில்லை என்பதைத்தான், தமிழர்கள் வலியுறுத்த வேண்டியவராகிறார்கள்.

மொழிவழி மாகாணம் அமைய வேண்டும் என்ற கருத்தை, யாரும் ஒப்புக்கொண்டே தீருவர். மொழி வழி, ஓரளவுக்கு, மக்களும் பிரிகிறார்கள்; நாடும் பிரிகின்றன. அப்படிப் பார்க்கும்போது, திராவிடத்தில் நான்கு மொழி நாடுகள் பிரிகின்றன. தமிழ் வழங்கும் பகுதி தமிழகமாகவும், தெலுங்கு பயிலும் இடம் ஆந்திரமாகவும், கன்னடம் பரவியுள்ள நிலம் கர்நாடகமாகவும், மலையாளம் தவழும் பாகம் கேரளமாகவும் அமைகின்றன. இப்படி மொழிவழிப் பிரிந்து, இனப் பண்பாடு வழியிலும், பொருளாதார வழியிலும், நிலப் பாகுபாடு வழியிலும் ஒன்றாக இணைந்து நிற்கக்கூடிய நான்கு பகுதிகளும் திராவிடமாக அமைந்தால், திராவிடக் கூட்டாட்சி இனிது நடைபெற வழி ஏற்படும் என்ற கருத்துடன்தான், நாம், “திராவிட நாடு திராவிடருக்கே” என்ற முழக்கத்தை எழுப்பிவருகிறோம். திராவிடம் அமைய வேண்டும் என்று ஆவலுறும் நாம், மொழிவழி மாகாணங்கள் உருவாகும் முறையை வரவேற்கத்தான் செய்கிறோம், அதில் கருத்து வேற்றுமைக்கு இடமில்லை என்ற காரணத்தால்.

மொழிவழி அமைந்த திராவிடப் பகுதி மாகாணங்கள் நான்கும், வடநாட்டு டில்லி ஆட்சிக்கு அடிமைப்பட்டிருக்காமல், தமக்குத் தாமே ஒரு கூட்டாட்சியை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதே நமது விருப்பமாகும்; இலட்சியமுமாகும்.

மொழிவழி மாகாணங்கள், தற்கால ஆட்சித் திட்டத்திற்குட்பட்டு அமையும்போதும், சண்டை சச்சரவுகள் ஏற்படாமல் சுமுகமாக நிறைவேற வேண்டும் என்ற குறிக்கோளுடன்தான் ஆந்திரா—தமிழர்களுக்குள் தகராறு வேண்டாம் என்று கூறி வந்தோம். ஆனால், தமிழர்கள் தாங்கள் ‘சோடையல்ல’ என்பதைக் காட்ட வேண்டிய அளவுக்கு ஆந்திரர்கள் பிரச்சினையை இழுத்துக் கொண்டு விட்டார்கள். சென்னையைக் கூறுபோடுவது அல்லது மத்திய அரசாங்கத்தின் பாதுகாப்பில் அடைக்கலப் பொருளாக ஒப்படைப்பது என்ற துரோகச் செயலைச் செய்ய ஆந்திர அட்டகாசக்காரர்கள் முனைந்துவிட்டார்கள்! பொறுத்ததெல்லாம் போதும் இனி பொறுக்க முடியாது என்று எக்காளமிட்டு எழ வேண்டிய பொறுப்பு, தாய்மொழியைத் தமிழாகக்கொண்ட தமிழர்களுக்கு ஏற்பட்டுவிட்டது. இந்த நிலையில் தமிழர்களைக் கொண்டு வந்து நிறுத்திய, முதல் — அடிப்படைக் குற்றவாளிகள் ஆந்திரர்களே யாவார்கள்!

**சென்னையை ஆந்திரரிடமும் விட மாட்டோம்.**

**சென்னையைத் தமிழகத்திலிருந்து பிரிக்கவும் அனுமதிக்க மாட்டோம்.**

**சென்னை தமிழர்க்குத்தான்.**

என விளக்கமாகவும், தெளிவாகவும், வீரமாகவும் தெரிவித்துவிட, சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கத்தின் சார்பாக, மாபெரும் மாநாடு விரைவில் கூடப்போவது அறிந்து மகிழ்கிறோம், அதற்கு வெற்றி வாழ்த்துக் கூறுகிறோம்.

சென்னையைச் சின்னாபின்னமாக்கிடத் துணியும் எந்தத் திட்டத்தையும், வேரோடு பெயர்த்து, வெந்நீர் விட்டு சாகடிக்க வேண்டியது தமிழர்களின் இன்றியமையாத கடமையாகும். எனவே சென்னையைத் துண்டு போடுவதோ அல்லது பறிகொடுப்பதோ போன்ற வேண்டாத—இடர் விளைவிக்கும்—நாசகாரியத் திட்டத்திற்கு இடமளிக்க மாட்டோம் என்பதைச் சென்னை மாகாணத் தமிழ்ச் சங்க மாநாடு, தமிழர்களின் சார்பாக நின்று எக்காளமிடும் என்று உறுதியாக நம்புகிறோம்.

இந்தியத்துணைக் கண்டத்தின் சூத்திரக்கயிறுகளை ஏந்திப் பிடித்துத் தம் விருப்பப்படிச் செயலாற்றிச் செல்லும் மூவராகிய நேரு- பட்டேல்- பட்டாபி ஆகியோரே சென்னை ஆந்திரர்க்குச் சொந்தமுடையதல்ல என்று தீர்ப்புக் கூறிவிட்டனரே! இனியும் ஆந்திரர்க்குச் சென்னைமீது ‘மோகம்’ இருப்பானேன்! சென்னையின் மீது ஆந்திரர்களுக்கு ஏற்பட்ட ‘மோகம்’ அற்றுவிட்டதா அல்லது தத்தளித்துத் தடுமாறிக் கொண்டிருக்கிறதா என்பது விரைவில் தெரிந்துவிடும் என்று கருதுகிறோம், அதுபற்றி அகில இந்தியக் காங்கிரஸ் காரியக் கமிட்டி அறிக்கைகள் கேட்டிருக்கிறபடியால்.

மொழிவழி மாகாணம் அமைப்பது என்று ஏற்பட்டுவிட்டால், தமிழ்கூறு நல்லுலகம் முழுவதும் தமிழர்க்குத்தான் உரித்தாக வேண்டும். வட வேங்கடம் முதல், கொடும் புனல் குமரி வரையில், தமிழகத்தில் இணைந்து நின்றுதான் தீர வேண்டும். வடக்கே சென்னையும், அதற்கப்பாலுள்ள சித்தூர் மாவட்டப் பகுதியும் தமிழகத்தில் சேர்ந்தாக வேண்டும்; தெற்கே நாஞ்சில் நாடு தமிழகத்தில் சேர்ந்தாக வேண்டும்; தமிழகத்தின் தலைநகராக **சென்னையே இருந்து தீர வேண்டும்**. திராவிடம் உருவாகும்போது நால்வரின் விருப்பத்தையொட்டித் தமிழகத்தின் தலைநகரை, திராவிடத்தின் தலைநகராகவும் கொள்ள, உடன்படிக்கை ஏற்படுத்திக்கொள்ளலாகும்.

சென்னைக்கு ஊறு பயக்கும் வல்லடி வழக்கைத் தொடுத்து ‘வம்பையும் தும்பையும்’ கொடுக்க நினைத்து விட்ட ஆந்திரர்களுக்கு, தெளிவு உண்டாக்கி, உண்மையின் தீர்ப்பை நிலைநாட்ட வேண்டியது தமிழர்களின் இப்போதைய கடமையாகி விட்டது. அதற்காகவே மாநாடு கூட்டப்படயிருக்கிறது. சென்னை மாகாணத் தமிழ்ச்சங்கத்தால் முயற்சியைப் போற்றுகிறோம்! நாட்டிற்கு நலம் பயக்கும் முடிவை வரவேற்கிறோம்!

**சென்னை நமதே!**

---

## முகவரி மாற்றம்

திராவிட முன்னேற்றக் கழக அலுவலகம் கீழ்க்கண்ட முகவரிக்கு மாற்றப்பட்டிருக்கிறது. தி. மு. கழக சம்பந்தமாக அஞ்சல் எழுதுவோர் இனிக் கீழ்க்கண்ட முகவரிக்கே எழுதும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

முகவரி:—

**2/45, முத்துமாரிச் செட்டித் தெரு, மண்ணடி, :: சென்னை-1.**

---

# உலக்கூடம்

[ ‘சம்மட்டி’ ]

### கீதைக்குக் கிராக்கி

இனி கீதைப் புத்தகத்துக்கு அதிக கிராக்கிதான்! இலட்சக் கணக்கில் அந்தப் புத்தகம் இனி தேவைப்படும் என்பதில் சந்தேகமில்லை! சமஸ்கிருதத்தில் இருந்தாலும் சரி, இந்தியில் இருந்தாலும் சரி அவ்வளவு பிரயோஜனம் இருக்காது. பிரெஞ்சு, ஜெர்மனி, இத்தாலி, ஆங்கிலம் முதலிய மொழிகளில் இருந்தால்தான் கீதைக்கு அதிக கிராக்கி இருக்க முடியும்.

தினம் தினம் ஐரோப்பாவில், பெரிய இடங்களில் போர்ப் பேச்சு பலமாக நிகழ்ந்து கொண்டே இருக்கிறது. அதனைத் தடுக்க ஐக்கியநாடு சபையில் உள்ள அணுகுண்டு அரசுகளுக்கு வழிவகை தெரியாமல் விழித்துக்கொண்டு இருக்கின்றன. மாஸ்கோவிற்குச் சென்றிருக்கிற இந்தியத் தூதுவர் சர். இராதாகிருஷ்ணன் மேற்கையும் கிழக்கையும் எங்காவது ஒரு இடத்தில் சந்திக்க வைக்கப் பார்க்கிறார்.

ஆளுக்கு ஒரு கீதைப் புத்தகத்தைக் கொடுத்துவிட்டால் போதும்; போரிடும் நினைப்பே ஒரேயடியாகத் தொலைந்துபோய் விடும். மேல்நாட்டு மொழிகளில், இலட்சக்கணக்கில், இனி அச்சடிக்கவேண்டியதுதான் கீதைப் புத்தகத்தை! எவ்வளவு பெரிய சிக்கலான பிரச்சினைகளையும் தீர்க்கக் கண்ணன் காட்டிய வழியில் இடம் இருக்கிறது பார்த்தீர்களா? இதைத் தெரிந்துகொள்ளாமல் அணுகுண்டை நம்பிக்கொண்டு வீண் காலம் போக்கிறதுகளே வல்லரசுகள்! நமது ‘பாரத்’ பாதங்களில் விழுந்து வணங்கி, ‘பாரத்’தை ஆசானாகக் கொண்டால்தான் மேல்நாடுகளுக்கு ஆத்ம ஞானம் சித்தியாகும். எதற்கும் முதலிலே கீதா படிப்பு நடக்கட்டும்!

### பைத்தியக்கார சபை!

என்ன இருந்தாலும், அவர் இப்படிச் சொல்லி இருக்கக் கூடாது. டில்லி சட்டசபையை பைத்தியக்காரர் மன்றம் என்று கூறுவதா? என்ன துணிச்சலய்யா அவருக்கு? அங்குள்ள சட்டசபை உறுப்பினர்களை எல்லாம் சித்தப்பிரமைகொண்டவர்கள் என்றும் தீர்மானித்துக் கேலி செய்கிறார்!

‘என்னப்பா சம்மட்டியாரே! விஷயத்தை விளக்கமாகக் கூறாமல், வாயில் வந்தபடி எல்லாம் கயிறு திரிக்கிறீரே’ என்று கேட்கிறீர்களா, உங்கள் கண்களின் மேலேயே தெரிந்தும்பாச்சே, உங்கள் விழிப்புக்கான காரணம்!

ரூபாயின் டாலர் மதிப்பை இந்தியா குறைத்துக்கொண்டதைப்பற்றி, டில்லி சட்டசபையில் ‘பாரத்’ புதல்வர்கள் எல்லாம் ஒன்றுகூடி விவாதித்தார்கள். சும்மா, சாதாரணமான விவாதமில்லை! கூச்சல், பிளிறல், கத்தல், கூவல், உறுமல், ஊளை, பிதற்றல், பாடல் போன்ற பலரகமான குரல்களும் கேட்டன. அதில் கே. டி. ஷா என்பவர் பேசும்பொழுது, இனியும் ரூபாயின் மதிப்புக் குறைவால் இந்தியாவிற்கு லாபந்தான் என்று நம்பிக்கொண்டு இருப்பவர்கள் சட்டசபை உறுப்பினர்களாக இருக்கமுடியாது, பைத்தியக்காரச்சாலையில் இருப்பவர்களாகத்தான் இருக்க வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார். காங்கிரஸ் கட்சியினரான ரங்கா, பிரகாசம் முதலியவர்கள்கூட காரசாரமாகத்தான் சர்க்கார் நடத்தையைக் கண்டித்துப் பேசினர். முடிவு என்ன? ரூபாயின் மதிப்பைக் குறைத்ததுதான் சரி என்று சட்டசபை தீர்மானித்துவிட்டது. கே. டி. ஷா கூறினதுபோல் சட்டசபை பைத்தியக்காரர்கள் நிரம்பியுள்ள மண்டபமாக மாறிவிட்டிருக்கிறது என்றுதானே கூறவேண்டும். பைத்தியக்காரர்கள் என்றால் என்ன என்பதற்குச், சுலபமாக இனிப் பொருள் கூறிவிடலாம். பைத்தியம் எப்படி இருக்கும் என்று கேட்டால், காங்கிரஸ் சட்டசபை உறுப்பினர்களைப் பார் என்று சொல்லவேண்டியதுதான். மாகாண சட்டசபை உறுப்பினர்களைக்கூட அந்த அதிமேதாவிகள் பட்டியலில் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்பது, சம்மட்டியாரின் திருத்தம்! சரிதானே!

### அவ்வளவும் பால்!

ஒரு கதை சொல்வதுண்டு அதாவது, ஒரு ராஜா, ஊரிலுள்ள வியாபாரிகளின் மனோபாவத்தைத் தெரிந்து கொள்வதற்காக, ஒரு யுக்தி செய்தார். பொதுவான ஒரு இடத்தில் ஒரு பெரிய அண்டாவைவைத்துவிட்டு, ஒவ்வொரு வியாபாரியும் ஒவ்வொரு படிபாலை, அந்த அண்டாவில் கொண்டு வந்து ஊற்ற வேண்டும் என்று வியாபாரிகளுக்கு உத்தரவு போட்டிருந்தார். குறிப்பிட்ட நாளில், ஒவ்வொரு வியாபாரியும், ஒவ்வொரு படி நிறையக்கொண்டு வந்து அண்டாவில் கொட்டினார்கள். ‘அந்த வியாபாரி பாலைத்தான் கொண்டு வந்து கொட்டியிருப்பார். நாம் ஒருபடி தண்ணீரைக் கொண்டு போய்க் கொட்டினால் நமது செயலை ஒருவரும் தெரிந்துகொள்ள முடியாது’ என்று நினைத்துக்கொண்டு ஒவ்வொருவரும், படிபடியாக தண்ணீரையே கொண்டுபோய்க் கொட்டி அண்டாவை நிரப்பி விட்டார்கள். இதிலிருந்து எல்லா வியாபாரிகளும் ஒரே கருத்தினராக இருப்பதைத் தெரிந்து கொண்டான் அரசன் என்று ஒரு கதை சொல்வதுண்டு!

இது போலத்தான், இருக்கிறது, இந்திய சர்க்காரின் போக்கும்! பண மூட்டைகளாக முன் வந்து, யுத்த காலத்தில் எவ்வளவு கொள்ளை லாபம் சம்பாதித்து, வருமான வரி கட்டாமல், சர்க்கார் கண்ணில் மிளகாய்ப் பொடி தூவினார்கள் என்பதைத் தாங்களாகக் கூறிவிட வேண்டுமென்று, பண்டிதர் வேண்டுகோள் விடுவதும்! போலீஸ் துப்பறியும் பட்டாளமும், கிரிமினல், சட்டங்களும், தங்கள் கைவரிசைகளைப் பாட்டாளிகளிடம்தான் காட்டும் போலும்! பணமூட்டைகளைக் கண்டால் பயந்து பதுங்கிக் கொள்ளுகின்றன! பணம் பாதாளம் வரையில் பாயும் என்பது பொய்த்துவிடக் கூடாதல்லவா?

# திராவிட முன்னேற்றக் கழகங்கள்

## திருச்சி—நகரக் கிளை

திருச்சி, அக். 4—2—10—49 ஞாயிறு மாலை 6-30 மணிக்கு மத்திய கழக பொதுக் குழு உறுப்பினர் தோழர் என். சஙகரன் அவர்கள் தலைமையில், திராவிட முன்னேற்றக் கழக அமைப்புக் கூட்டம் திருச்சி கருணாநிதிப் பார்க்கில் நடைபெற்றது. தி. மு. கழகம் அமைக்கவேண்டிய அவசியம் பற்றி தலைவர் முன்னுரையாகப் பேசியபின் நடவடிக்கைகள் குறித்துத் தோழர் ஜி. பாரஙகுசம், எம். எஸ். மணி, எஸ். நெடுமாறன், ஆர். சுலைமான் ஆகியோர் விளக்கிப் பேசினார்கள்.

பின்னர் திராவிட முன்னேற்றக் கழகம்-திருசசி நகரக் கிளை அமைப்பதென முடிவு செய்யப்பட்டு, செயற்குழு தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர்—எம். எஸ். மணி; துணைச செயலாளர்— தி. உ. சஙகிலி (சிவசஙகரன்); பொருள் உறுப்பினர்— என். சாமபசிவம்; விளமபர உறுப்பினர் - எஸ். நெடுமாறன். ஏனைய செயற்குழு உறுப்பினர்கள்— டி. எல். மாணிக்கம (மலைக கோட்டை), கே. கோவிந்தராஜு (எஸ்.எம்.எஸ். பஸ் தொழிலாளர்), ஆர். சுலைமான் (உறையூர்), எஸ். கே. சேகர் (வெள்ளை வெத்திலைக் காரர் தெரு), ஆர். கோபாலகிருஷ்ணன் (சைனாபஜார்), ஆ.கே. சாமி (புதூர்பகுதி), தி.மா. வானமாமலை (ஆண்டார் வீதி), துரைசாமி (மார்சக பேட்டை பீம நகர்), ஆர். மாரியப்பன் (டவுன் ஸ்டேஷன் பகுதி). இன்னும் தேவைப்படும நிர்வாக உறுப்பினர்களைச சேர்த்துக் கொள்ள செயற்குழுவுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டது.

அண்ணா அவர்களைப் பொதுச செயலாளராககொண்ட திராவிட முன்னேற்றக் கழக பொதுக் குழுவின் சட்ட திட்டஙகளை இக்கூடடம மனப்பூர்வமாக ஆதரிக்கின்றது என்று தீர்மானிககப்பட்டது.

16—10—49ல் நடைபெறஇருக்கும திராவிட முன்னேற்றக் கழக ஆரம்பக்கூட்டததை நன்முறையில் நடத்தித்தாக கீழ்க்கண்டவர்களை இககூட்டம் நியமிக்கிறது: (1) என் சாம்பசிவம், (2) எம். எஸ். மணி, (3) எஸ். நெடுமாறன், (4) தி. உ. சஙகிலி, (5) ஆர். சுலைமான். என்று தீர்மானம் நிறை வேற்றப்பட்டது. நன்றி கூறக்கூட்டம இரவு7-15க்கு முடிவுற்றது. என விளம்பர உறுப்பினர் எஸ். நெடுமாறன் எழுதுகிறார்,

அடியிற்கண்ட பகுதிகளிலிருந்து நகரக்கிளைசசெயற்குழுவிற்கு உறுப்பினர்கள் சேர்க்கப்பட வேண்டியிருப்பதால், ஆஙகாஙகுள்ள நண்பர்கள பகுதிக்கு ஒருவராகத் தேர்ந்தெடுத்து, என். சாமபசிவம்,கருணாநிதிபார்க், என். எஸ். பஙகளா, சஙகரன் பிள்ளைரோடு தேவதானம, திருசசி என்ற முகவரிக்குத் தெரிவிககும்படியாகத்தோழர் எஸ்.நெடுமாறன் ஈகட்டுக்கொள்கிறார்.

பகுதிகள் வருமாறு:—தாராநூர் பகுதி, பாலக்கரைப் பகுதி, மேலப்புதூர் கண்டோன்மெண்டு பகுதி, இடத்தெரு இருதயபுரம் பகுதி, வரகனேரி பகுதி, சிந்தாமணி பகுதி, பெரியகடை வீதி பகுதி, மார்க்கட் பகுதி, தென்னூர் பகுதி.

* * *

## திருக்களாச்சேரி—கிளை

திருக்களாச்சேரி, அக். 4—3-10-49 மாலை 5 மணி அளவில் இவ்வூர் வீரசோழன் ஆற்றஙகரையில் திராவிடர் கழக உறுப்பினர்கள் குழுமி, மாற்றார் நகைக்கும் வண்ணம இலட்சியத்திறகு மாறுபட நடந்த பெரியார் தலைமையில் நமபிக்கையில்லை எனத் தீர்மானித்து, உறுப்பினர்களின் முழு ஆதரவுடன் இவ்வூர் திராவிடர் கழகத்தை திராவிட முன்னேற்றக் கழகமென மாற்றி அமைத்தனர்.

பின்னர் கீழ்க் கண்டவர்கள் அடஙகிய செயற்குழு தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர்:-என். எம். மைதீன்; துணைச்செயலாளர்:—இரா. கிருட்டிணமூர்த்தி; பொருள் உறுப்பினர்:—ப. ந. தியாகராசன்; விளம்பர உறுப்பினர்:—சி. ஜம்பு.

ஏனைய செயற்குழு உறுப்பினர்:—கி. இராமதாஸ்; சு. இரத்தினம், மா. அமிர்தலிஙகம், சு. கோவிந்தராசு, மாரிமுத்து.

மாணவத்தோழர்கள் மைதீன், ஜம்பு ஆகிய இருவரும் பேசியபின்பு கூட்டம் இனிது முடிந்தது. என விளம்பர உறுப்பினர் அறிவிககிறார்.

* * *

## குன்னூர்—கிளை

குன்னூர், அக். 4—30-9-49 வெள்ளியன்று மாலை $5\frac{1}{2}$ மணிக்குத்தோழர் முத்து அவர்கள் தலைமையில் அவருடைய இல்லத்தில், திராவிட இளைஞர் மறுமலர்ச்சிக்கழகக் கூட்டம் நடைபெற்றது. கழகத்தின் பெயரை 'திராவிட முன்னேற்றக்கழகம-குன்னூர்கிளை' என மாற்றி அமைப்பது எனத் தீர்மானிக்கப்படடது. பின்னர் செயற்குழு தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர்—சு.கி. மூர்த்தி; ச. முருகேசன்; நிதி உறுப்பினர்—வீ. கா. ஒளியழகன்; விளம்பர உறுப்பினர்—ப. முத்து. ஏனைய செயற்குழுஉறுப்பினர்:—பழ. கிருட்டிணசாமி, கண்ணன், கேசவன், நெடுமாறன், சுப்பையா. அவசியம் ஏறபட்டபோது நிர்வாக உறுப்பினர்களை அதிகப்படுத்திக்கொளள குழுவுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டது. மேலும் சில தீர்மானஙகள் நிறைவேறறப்பட்டுக்கூட்டம் இனிது கலைந்தது என விளம்பர உறுப்பினர் எழுதுகிறார்.

* * *

## தளவாய்புரம்—கிளை

தளவாய்புரம், அக். 3—இன்று இரவு 8-30 மணிக்குத் திராவிடர் முன்னேற்றக்கழகம—தளவாய் புரம கிளை, தோழர் அ. வன்னிய பெருமாள் சைக்கிள் கடையில் தோழர் கு.மு. ராமசாமி அவர்கள் தலைமையில் கூடியது.

தோழர் அ. வன்னிய பெருமாள் அவர்களைச் செயலாளராகக் கொண்ட செயற்குழு அமைக்கப்பட்டது. செயற்குழு உறுப்பினர்கள்:—கு.மு. ராமசாமி, க. அய்யாச்சாமி, ஏ. எஸ். ஏ. சாமி, உ. மா. சின்னச்சாமி, மா. அருணசலம், ஆ. அய்யம் பெருமாள், மு. அருஞ்சுனை, அ. சுப்பையா, கா ச. காளிமுத்து, மு.கா. ராமசாமி, க.சஙகர நாராயணன். மேலும் இரண்டு தீர்மானஙகள் நிறைவேற்றப்பட்டுக் கூட்டம் கலைந்தது. எனத்தோழர் அ. வன்னியபெருமாள் எழுதுகிறார்.

* * *

## திசையன்விளை—கிளை

திசையன்விளை, அக். 4—2—10—49 ல் திசையன்விளை திராவிட முன்னேற்றக் கழகக் கிளை கழகத் தோழர்களால் அமைக்கப்பட்டது. புதிய செயற்குழுவினர் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

செயலாளர்—கே. பி. தேசிகன்; துணைச் செயலாளர்—வா. சொக்கலிஙகம்; நிதி உறுப்பினர்—ஆ. ந. திருவடிமுத்து; விளம்பர உறுப்பினர்—ஆ. ந. சுப்பையா. ஏனைய செயற்குழு உறுப்பினர்:— மா. இ. முத்து, வீ. திருபாற்கடல்நாதன், எஸ். முத்துச்சாமி, யோ. பிசசை, வா. இராமமூர்த்தி, இ. முத்துக் குமாரசாமி, எஸ். இராமசாமி. எனச் செயலாளர் தோழர் கே. பி. தேசிகன் எழுதுகிறார்.

## சென்னை ஏழுகிணறு திராவிட முன்னேற்றக் கழகத் துவக்க விழா

9—10—49 ஞாயிறு மாலை 6 மணிக்கு ஏழுகிணறு அருகாமை அணைக்கார கோனன் தெரு மைதானத்தில் நடைபெறும்.

தலைவர்:—தோழியர் சத்தியவாணி முத்து

சொற் பொழிவாளர்கள்:-இரா. நெடுஞ்செழியன், காஞ்சி. கலியாணசுந்தரம், எ. எஸ். ராமன்.

அனைவரும் வருக. ஒலிபெருக்கி உண்டு.

செயலாளர், சே. தேவசகாயம்

# இனி நடப்பவை

திருச்சி:—பெரியகடை வீதி — திருசசி பெரியகடை வீதி திராவிட முன்னேற்றக்கழக நகர உட்கிளை அமைப்புக் கூட்டம் 9—10—49 ஞாயிறு காலை 9 மணிக்குப் பெரிய கடை வீதி கைலாச நாதர் கோவிலுக்கு எதிரில் உள்ள வெள்ளிப் பட்டறையில் நடைபெறும். தி.மு. க.ஆதரவாளர்கள் அனைவரும் வந்து கலந்து கொள்ளுமாறு தோழர் ஆ. அண்ணாமலை அழைக்கிறார்.

* * *

நெல்லை:—17-9-49ல் சென்னையில் அமைக்கப்பட்ட திராவிடமுன்னேற்றகழக அமைப்பை யொட்டி நெல்லை நகரக்கிளை ஒன்றைக்காண வேண்டி, 9-10-49 ஞாயிறு காலை 10 மணிக்கு ஆலோசனைக்கூட்டம் நெல்லை சந்திப்பு மீனாட்சிபுரம் வ. உ.சி. சஙகமேடையில்நடைபெறும். அதுபோது ஆதரவாளர்கள் அனைவரும் வரும்படி தோழர்கள் தனராசன், வைத்தியநாதன், இரா. சு. இராமச்சந்திரன் அழைக்கிறார்.

* * *

சென்னை - சூளை:— சூளை திராவிடர் கழகத்தின் பொது உறுப்பினர் கூட்டம் எதிர் கால நிலை பற்றி ஆராயவும், கழக அமைப்பு பற்றி ஆலோசிக்கவும் 9—10—49 ஞாயிறு காலை 8-30 மணிக்கு 22, வெஙகடாசல முதலித்தெரு, பக்தவத்சலம் இல்லத்தில் நடைபெறும். எனச்செயலாளர் கா. மு. புவியரசு அழைக்கிறார்.

* * *

கோவை:-கோவை நகரில் திராவிடமுன்னேற்றக் கழகக் கிளைகள் அமைப்பது பற்றி ஆலோசிக்க 9-10-49 ஞாயிறு காலை 10மணிக்கு நகர திராவிடர் கட்டிடத்தில்கூடும். கூட்டத்திற்குக் கழக அன்பர்கள் தவறாது வருமாறு வேண்டப்படுகிறார்கள். எனவிளம்பர உறுப்பினர் தோழர் வெ. கிருஷ்ணமூர்த்தி அறிவிக்கிறார்.

* * *

சென்னை—9-10-49 மாலை 6 மணிக்கு சென்னை சூளை வள்ளுவர் மகாஜன சஙகத்தின் சார்பாகப் பொதுக்கூட்டம் தோழியர் ராஜம்மாள் தலைமையில் நடைபெறும். தோழர்கள் குப்புசாமி, வி. மகாலிஙகம் ஆகியோர் பேசுவார்கள். இடம்:—சென்னை சூளை டிமலலஸ் ரோடு, ஏகாத்தம்மன்கோயில் சந்து.

* * *

காரைக்கால்-வருங்கால வேலைத் திட்டம் பற்றி ஆலோசிக்கவும், திராவிட முன்னேறறக் கழகம் பற்றி ஆவன செய்யவும் 9-10-49 ஞாயிறு மாலை 3-மணிக்கு கழகக் கட்டிடத்தில் திராவிடர் கழகப் பொது உறுப்பினர்கள் கூட்டம் நடைபெறும். அனைவரையும் வரும்படி கழகத் தலைவர் தோழர் பெ. நாராயணசாமி அழைக்கிறார்.

* * *

கணியூர்—9—10—49 ஞாயிறு மாலை 7 மணிக்கு கணியூர் "விக்டரி மில்ஸ்" கட்டிடத்தில் தி. மு. கழக அமைப்புக் கூட்டம் நடைபெறும். ஆதரவாளர்கள் இதையே அழைப்பாகக்கொண்டு வரும்படி தோழர் கே. என். ஏ. முத்து அறிவிக்கிறார்.

# திராவிட முன்னேற்றக கழக துவக்க விழாக் கூட்டங்கள்

## 16-10-49

கோவை:— சி.என். அண்ணாதுரை, எஸ். ஆர். சுப்பிரமணியம், பெத்தாமபாளையம பழனிச்சாமி.

திருச்சி:— இரா. நெடுஞ்செழியன், எஸ். அப்பாவு.

விருதுநகர்:— என். வி. நடராசன், ஏ. வி. பி. ஆசைத்தம்பி.

மதுரை:— என். ஜீவரத்தினம, டி. கே சீனிவாசன்.

தூத்துக்குடி:— காஞ்சி. கல்யாணசுந்தரம், மு. கருணாநிதி,

வேலூர்:— சி. பி. சிற்றரசு, கே. ஏ மதியழகன்.

குறிஞ்சிப்பாடி:— காஞ்சி. மணிமொழியார், இரெ. இளம்வழுதி.

தஞ்சை:— ஈ. வெ. கி. சமபத, என். எஸ் இளங்கோ, இராமாமிர்தத்தமமையார்.

திண்டுக்கல்:— எஸ். கே. சாமி, தஙகப்பழம.

வடக்களந்தல்:— த. மா. திருநாவுககரசு

## 17-10-49

சேலம்:— சி. என. அண்ணாதுரை, ஏ. சிததையன.

கோயில்பட்டி:— காஞ்சி கல்யாணசுநதரம, மு. கருணாநிதி.

புதுக்கோட்டை:— என. எஸ. இளஙகோ, என. ஜீவரததினம.

மாயவரம்:— ஈ. வி கே. சமபத, இரெ. இளமவழுதி. டி. கே. சீனிவாசன.

திருப்பத்தூர்:—(வ. ஆ.) கே. ஏ. மதியழகன, சி. பி. சிறறரசு.

லால்குடி:— என. வி. நடராசன, ஏ. வி. பி. ஆசைததமபி

## 18-10-49

உடுமலைப்பேட்டை:— சி. என. அணணாதுரை, எஸ். ஆர். சுப்பிரமணியம.

பட்டுக்கோட்டை:— என. வி. நடராசன, ஏ. வி. பி. ஆசைததமபி. இரெ. இளமவழுதி.

திருவண்ணாமலை:— சி. பி. சிறறரசு, கே. ஏ. மதியழகன்.

## 19-10-49

திருவெறும்பூர்:— என. வி. நடராசன, ஏ. வி. பி. ஆசைத்தமபி.

விழுப்புரம்:— சி. பி. சிற்றரசு, சி. டி. டி. அரசு

பல்லடம்:— மாலை 3-மணிககு — சி. என். அண்ணாதுரை, எஸ். ஆ. சுப்பிரமணியம

திருப்பூர்:— மாலை 7-மணிககு — சி. என். அண்ணாதுரை, எஸ். ஆ. சுபபிரமணியம

## 20-10-49

விருதாசலம்:— என். வி. நடராசன், எ. வி. பி. ஆசைத்தமபி.

திருத்துறைப்பூண்டி:— ஈ. வெ. கி. சமபத், இராமாமிர்தத்தம்மையாா, எஸ. கே. சாமி

## 21-10-49

மன்னார்குடி:— ஈ. வெ. கி. சம்பத், இராமாமிர்தத்தமமையார், எஸ். கே. சாமி

## 22-10-49

சிதம்பரம்:— ஈ. வெ. கி. சம்பத், இராமாமிர்தத்தம்மையார், எஸ். கே. சாமி

## 23-10-49

காஞ்சிபுரம்:— சி. என். அண்ணாதுரை, கே. அன்பழகன, சத்தியவாணிமுத்து. சி. டி. டி. அரசு, ஏ ஆர். வெஙகடராமன்.

திருவாரூர்:— இரா. நெடுஞ்செழியன், ஈ. வெ. கி. சமபத்

கடலூர்:— ஏ சித்தையன், என். வி. நடராசன்

# இந்து மதம் எழுந்த...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

வம் பெறுவதும் இயற்கையில் நிகழக் கூடியதுதான். சர். இராதாகிருஷ்ணன் ஆமோதிக்கிறூர் இந்த இயற்கை நியதியை.

அடிப்படையில் மாறுபாடு இருக்கும் எந்தக் கோட்பாடும் மோதித்தான் தீரும். அந்தக் கோட்பாடுகளுக்குடைய இரு சாராரும் போரிட்டுத்தான் தீருவர், ஆரியர்—திராவிடர் அடிப படையில முரண்பாடான கருத்துக்களேக்கொண்டவர்கள். வாழ்க்கைத் தத்துவத்தை வெவ்வேறு கண் கொண்டு பார்ப்பவாகள் இரு இனத்தவர்கள். வீரத்தைப் போற்றுபவர்—வீரத்தைப் பயிலுபவர்—வீரத்தைத் துணைக்கொள்பவர்—திராவிடர். வஞ்சகத்தைச்-சூழ்ச்சியை சதிச் செயலை—வாழ்வு பெறும்சாதனமாகக் கொள்பவர் ஆரியர். வரலாறு பேசுகிறது இவ்வாறு.

வாழ்வு மாயம்-ஆரியத்துக்கு!
வாழ்வு நிச்சயம்-திராவிடர்க்கு!

மானம்பெரிது திராவிடருக்கு. மானம்காப்பதிலே கருத்துடையவர்கள் திராவிடர்கள. மானம் காக்கும் பொருட்டு உயிரையும் ஈயும் துணிவு கொண்டிருப்பவர் திராவிடர்கள். உயிர் வாழ்வதற்காக, மானத்தையும் இழக்கத் தயாராக இரு என்று போதிப்பது ஆரிய கலாசாரம்!

உழைப்பை உயர்வாக மதிப்பது திராவிடர் கோட்பாடு. உழைப்புத் தாழ்ந்தது என்று உழைப்பைத் தாழ்த்திப் பேசுவது ஆரியர் மனவளம்!

இது வரலாறு, இனத் துவேஷப் பிரசாரமல்ல பாரிஸ் நகரில், பல படித்தவர்கள் முன்னிலையில், மாஸ்கோவில் இந்தியத் தூதுவராகப் பணி புரியும், கீழ்நாட்டுத் தத்துவத்தின் சிகரம் என்று புகழப்படும் சா இராதாகிருஷ்ணனர் கூறியுள்ள தற்று, நாம் கூறும் விளக்கம் இது அவ்வளவுதான்!

'ஆரியா- திராவிடா' மோதுதலைத் தடுக்க- முடிவு கட்ட- எழுந்தது ஹிந்து மதம், தோற்றுவிக்கப்பட்டது ஹிந்து மதம் இரு குழுவினர்களின் கூட்டு அல்ல ஹிந்து மதம் போரை முடிவிற்குக் கொண்டு வர, வீரம் விரும்பி[illegible] வைத்தாவில்லை. வீரம் கைவிடப்பட்டு, வஞ்சனை, வெற்றிக்கான தர்மமாக மேற்கொள்ளப்படுகிறது; ஹிந்து மதம் என்று பெயர் பெறுகிறது. இதுவே ஹிந்து மதத்தின் தோற்றம். 'ஆரியர்- திராவிடர்'- இரு கலாசாரத்தின் கலவை- கூட்டு அல்ல! என்று திட்டவட்டமாகக் கூறிவிடுகிறூர் சரவபல்லியார்.

'ஆரியர்- திராவிடர் மோதுதலே முடிவிற்குக் கொண்டுவர ஹிந்து மதம் தோற்றுவிக்கப் பட்டது. இதனுல் வெற்றியும் கிடைத்தது.'

இவ்வாறு விளக்கமாக, ஐயத் திறகுத துளியும் இடம் வைக்காமல, அனைவருக்கும் புரியும் முறையில, எடுத்துக் காட்டியுள்ளார், இராதாகிருஷ்ணனர். நாமல்ல இவ்வாறு கூறுவது, இந்தச் சந்தர்ப்பத்தில.

சிங்கத்தை நரியடிக்கும் திறமில்லை! சிங்கத்தை வீழ்த்த வேண்டிய கவலை நரிக்கு, வாழ்விலே இருக்கிற ஆசையால்! வீரம் ஒதுக்கப்பட்டு, வெற்றி தரும் வேறு மார்க்கத்தை நரி மேறகொள்ள வேண்டி இருக்கிறது!

திராவிடரை-ஆரியரால்வெல்ல முடியவில்லை! ஹிந்து மதத்தை உருவாக்கினர்! எவருக்குச் சாதகமானதாக இருக்கும் ஹிந்து மதம்? இதுதான் சூட்சமம்.

அணுகுண்டு அமெரிக்காவிடம் மட்டுமே இருக்கிறது என்ற நிலை இருக்குமபொழுது, அதனடியாக ஏற்படும் பலனும் அமெரிக்காவிறகுத்தானே சாதகம் அளிக்கக் கூடியதாக இருக்க முடியும்? திராவிடா சீரழிவுகது என்றே, ஆரியாகளால் சிருஷ்டிக்கபபட்ட ஹிந்து மதம் எவருக்குச் சாதகமளிக்கக் கூடியதாக இருக்கும் என்பதை அறிஞர்கள்முடிவிற்கு விட்டு விடுகிறோம். இந்த வரலாற்று உண்மையைக கூறுவது நாம் மட்டும் அல்ல சா. இராதகிருஷ்ணனும் கூடக் கூறுகிறூா—அதவும் பாரிஸ் பட்டணத்தில். அவா தூற்றவாளியானல் நாமும் தூறறவாளிதான்!

நாமக்கல்லாரைவிட சரவபல்லியாருக்கு, 'ஏடு அதிகா[illegible] தெரியும். முன்னாள் நாட்டு நட[illegible]பும் தெரியும் அவருக்கு. நமது தூற்றுதலுக்கு, கிடைத்துள்ள — அதுவும் இந்தியத் தூதுவரிடமிருந்து கிடைத்துள்ள ஆதரவை—நமது கருத்துக்குக் கிடைத்துள்ள அறநிலை வெற்றி யென்றே கொண்டு மகிழ்கிறோம். நமது வாழ்த்துதலையும் மகிழ்ச்சியையும் அவருக்கு அறிவித்துக்கொள்ளுகிறோம்.

## திறன் ஆய்வு

# உயிரா? ஓவியமா?

'சென்னை நகரம் தமிழருடையதுதான்—இதில் துளியும் ஐயமில்லை!'

இந்த உண்மை, இடை இடையே பாட்டாலும் உறுதிசொற் கூட்டாலும், கேட்போர் நெஞ்சத்தில் நிலை பெற்றுவிடும் வண்ணம், இடியோசைபோல் எழுப்பப்படுகின்றன. மகிழ்ச்சிக்குரியது 'சபாஷ்! பேஷ்!'

நல்லதமிழில், நண்பர் நாரண. துரைக்கண்ணனர், தம் மனத்துள் மறைந்துகிடக்கும் தாம் விரும்பும, 'புதுமை'க் கருத்துக்களே, உயர்ந்ததோர் ஓவியமாக்கி, அதற்கு உயிர் அளிக்க, டி. கே. ஷண்முகம சகோதரர்களிடம் ஆழ்ந்த நம்பிக்கையோடு, ஒப்படைத்து இருக்கிறூர். டி. கே. எஸ். நடிகர் குழுவினர், உயர்ந்த நிலையில், பிறரைப் பின்னணியில்நிறுத்தும் முறையில், 'ஓவிய'த்துக்கு உயர்தரும் பணியில் திறமையாக முயன்று, வெற்றி கண்டு வருகின்றனர் நாளாகவாக.

உரையாடல், இயன்றவரையில் செந்தமிழில் தீட்டப்பட்டு இருக்கிறது; ஆசிரியரின் தமிழ்ப்பற்றுக்கு ஓர் எடுத்துக காட்டாக நிற்கிறது.

துவக்கத்தில் கதை அவ்வளவு விறுவிறுப்பு இல்லாததுபோல் காணப்பட்டாலும, நீளநீள அந்தப் பண்பு வளர்ந்துகொண்டே வந்து இறுதிக்கட்டத்தில் முழு உயிரும பெற்று நிற்கிறது. பொதுவாகப் பலவித அக உணர்ச்சிகளையும், குறிப்பாகத்தீவிர உணர்ச்சிகளையும் நடித்துக்காட்டுவதற்கு, தமிழ் நாட்டில் உள்ள நடிக மணிகளில் தலை சிறந்து விளஙகுகிறூர்கள் தோழர் பகவதியும், ஷண்முகமும என்பது மிகையாது.

காதல் கைகூடாத நிலையில், இனி என்றும் அதறகான வாய்ப்பும் மறுக்கப்பட்டுவிட்ட சுற்றுச் சார்பில், கற்பகமும் நடராஜனும் தனித்திருந்து பேசும கட்டம் மயிர்க கூச்சலை நமககளிக்கிறது இதனை மறைந்து இருந்து பார்க்கும் சந்திரசேகரர் நடிப்பிலும், நமமை திடுக்கிடச் செய்யும நல்ல நடிப்புத் திறம பொருந்தியிருக்கிறது. இந்தக் கட்டத்தில கற்பகத்தின் நடிப்பு நமது இருதயத்தைப் பிளக்கச் செய்து விடுமோ என்ற அச்சத்தை நமக்களிக்கிறது. 'சபாஷ்! பேஷ்!'

இவ்வளவு சிறந்தக் கட்டத்தில் நமது மெல்லிய உணர்ச்சிகள் அனைத்தையும ஒருஙகே தட்டி யெழுப்பும உயிர் நடிப்பினூடே, 'ஓவிய'ஆசிரியர் தரும் கருத்து ஓவியந்தான் இது என்பதை நமக்கறிவிக்கத் தவறவில்லை.

தமிழர் கண்ட வாழ்வின் இலட்சியம், 'நிலையாமை'க் கருத்தோடு இணங்கிப் போவதுதான் என்று, தவருகப் பொருள் தரும முறையில் தீட்டப்பட்டிருக்கிறது. 'அறத்தொடு நிறறல்' திருநீற்றுப் பதிகத்தின் தெளிவுரையாக இருக்கத்தான் வேண்டுமென்று, நமமால் நமப முடியவில்லை.

சந்திரசேகரர், காடேகிக் கடும் புலியை வேட்டையாடி, கூரிய நகத்தைப் பூணுக்கி, உயிர்க் காதல் இல்லாது நிர்பந்தத்தால் உடல் பயிலல மட்டும் இருந்தால் போதும, என்ற பெருநோக்கின் சின்னமாக, கறபகத்தின் கழுத்தில் அணியமுன் வந்தார் என்று கூறுவதற்கில்லை! சந்திரசேகரர் ஒரு ஐ. சி. எஸ்—கற்பகத்தின் கணவராகும பேறு கிடைக்கிறது!

கறபகத்தின் வாழ்வு காஞ்சிரம காயாககப்படுகிறது. தமிழர் மரபு மல்ல முன்னேறறக கருத்துமல்ல! நடராஜனின் காதல் கருகிப்போய் நாடோடியாக்கப்படுவது நற்றமிழர் பண்பாகாது! 'திண்டினல் திருநீலகண்டம்' என்ற நிலையை சந்திரசேகருக்குக் கொடுத்திருப்பதும் கொடுமை!

வீராசாமி- கன்னியம்மா காதல்கள் இருக்கும் இடத்திற்கேற்ப வேட்டையில் சமுதாயத்தில அவா நடககும் உரையாடலிலும், 'கண்ணியம' இருக்கிறபோது, செல்வச சீமானுன சோமசுந்தர முதலியார் மனைவியை— படித்த பெண்ணுக இருந்துங்கூட— 'லௌகீகம்' தெரியாதவள் என்று காட்டக் கூடிய 'கண்ணியம'கலவாத சொறகளைப் பேசச செய்திருப்பது, ஆசிரியருககுள்ள தமிழ்ப் பற்றை மட்டுமே எடுத்துக்காட்டுவதாக இருக்கிறது.

"ஊடல் உணர்தல் புணர்தல்
இவை காமம்
கூடியார் பெற்ற பயன்"

நல்ல வேஷப் பொருத்தம், கண் கவரும திரைககாட்சிகள, பொருத்தமான உடைகள், ஒளியமைப்புகள—பார்ககப்பார்க்க மகிழ்ச்சியளிக்கின்றன.

'பொருநன்'

# 'அமரகவி'யில்—சரமகவி!

'அப்பனே! கணபதி! எதோ இன்றுதான் உன் அருளாலே, கொஞ்சம மப்பும் மந்தாரமுமாக இருக்கிறது. மழைவரும போல தெரிகிறது மழை இன்று பெயதால்தான், ஏழை பிழைகக முடியும மழை பொழிய அருள் செய் இன்று மாலையும இரவும நலல மழை பெய்தால பத்து தேஙகாய உடைககிறேன'—பக்தியுடன் நமபிக்கையுடன, உழவன விநாயகா முன. வணங்கி நின்று, இக் கருத்தைத் தன் கொச்சை மொழியால கூறினன்.

சரமகவி இதைக கேட்டுக் கொண்டிருககிறூர்.

சில விநாடிகளுக்குப் பிறகு, ஒரு'கூததாடி' வந்துகும்பிட்டு நின்று, "அப்பனே! ஆனைமுகனே! அனேக நாளாக என மனதிலே இருநது வநத ஆசை ஈடேற இனறுதான் 'சானசு' கிடைத்திருககிறது. இனறிரவு இந்த ஊரில 'கூததது' நடத்த வந்திருககிறேன். மபபும மந்தாரமுமாக இருககிறது. மழை வரும்போலத் தெரிகிறது. மழை வந்தால. என் ஆசையிலே மண்விழுநது விடும்—கூத்து நடக்காது—ஆகையாலே, அப்பனே! இன்றுமழை வராதபடி பார்த்துக்கொள், ஒரு விக்கினமுமின்றி இன்றிரவு கூத்துநடை பெற்ருல, விக்னேஸ்வரா! உனக்கு 50 தேங்காய் உடைக்கிறேன். அருள் செய்" என்ற கருத்துப்பட கூறித் தொழுகிறுன்.

சரமகவி இதையும் கேட்டுத் திடுககிடுகிறூா.

மழை வேண்டும் என்று ஒரு பகதா கேடகிறூர்.

மழை கூடாது என்று இன்னொ பகதர் கேடகிறூர்.

மழைபெயய, 10 தேங்காய்!

மழை பெய்யாதிருக்க 50 தேஙகாய !!

பார்த்தார், சரமகவி, பிளளையாருக்கு ஏறபட்ட இந்தச் சிக்கலான நிலைமையை.

" அப்பனே, விநாயகனே" நீ ஏன் கல்லாக இருககிறுய் என்பது இபபோது தான் எனககு விளஙகிற்று" என்று கூறுகிறூர்.

உண்மைதானே! விநாயகர், பக்தர்களுக்கு நேரடியாகப் பதில் கூறக கூடிய உருவிலும நிலையிலும இருந்தால, எவ்வளவு தொலலை ஏற்பட்டிருக்கும் என்பதை எண்ணிப் பாருங்கள்.

யார் இந்தச் சரமகவி என்று கேட்கிறீர்களா?

யாராக இருக்க முடியும்! நமம நகைசசுவை அரசர் N. S. கிருஷ்ணன்தான. பாகவதர் நடிக்கும், அமரகவியில், N. S. K. சரமகவியாகத் தோன்றுகிறூர். சென்னை நியூடோனில், மேலே தீட்டப்பட்டுள்ள 'காமிக்' சென்ற வாரம படம் பிடிக்கப்பட்டதாம்.



முருகன டாககீசாா தயாரிககும 'ரத்ன குமார்' படத்தில பானுமதி.

# பொழுது போக்கு

### தமிழ் — நாடகம்

ஒற்றைவாடை — உயிரோவியம்

### தமிழ்—சினிமா

| | |
|---|---|
| சித்ரா | —மஙகையர்க்கரசி |
| பிரபாத் | — ,, |
| மகாராணி | — ,, |
| சரஸ்வதி | — ,, |
| லட்சுமி | — மாயக்குதிரை |
| ஸ்டார் | — ,, |
| கெயிட்டி | — அசோககுமார் |
| பிராட்வே | — சிவகவி |

### தெலுங்கு

| | |
|---|---|
| பாரகன் | — லைலா-மஜ்னு |
| சினிமா செண்ட்ரல் | —துரோகி |
| சன் | — ,, |

### இந்தி

| | |
|---|---|
| வெல்லிஙடன் | — டில்-கி-துனியா |
| சாகா | — மிர்சா சாகிபான் |
| செலக்ட் | — மேலா |
| கபாலி | — லைலா-மஜ்னு |

### ஆங்கிலம்

| | |
|---|---|
| Midland | — The Blue Lagoon |
| New Globe | — Bride of Vengeance |
| Casino | — City Across the River |
| New Elphinstone | —Panhandle |
| Roxy | — The Wife of Monte cristo |
| Minerva | — Tarzan and the Huntress |

## பன்னீர்செல்வம் சமரச வாலிபர் சங்கம்

குடந்தை, அக். 2—

இவ்வூர், சர்.எ.டி. பன்னீர் செல்வம் சமரச வாலிபர் சஙகக் கூட்டம தோழர் சி. கோவிந்தசாமி தலைமையில நடைபெற்றது. திராவிடர் கழகத்தலைவா பெரியார் செய்து கொண்ட பொருந்தாத் திருமணத்தையும, அவர் போக்கையும் கண்டிப்பதோடு, இதுவரை திராவிடர் கழகத்தை ஆதரித்து வந்த இச் சஙகம் இனி திராவிட முன்னேற்றக் கழகத்தை ஆதரிப்பதென்றும், சஙகத்தின் எதிரில் பறக்கும தி. க. கொடியை மாற்றி தி. மு. க. கொடியை 21—10—49ல் ஏற்றுவது என்றும தீர்மானிக்கப் பட்டது. எனததோழர் எ. ஆர். விஙகம் அறிவிக்கிறூர்.

## இனி நடப்பவை

திண்டிவனம்— இவ்வூர் திராவிட முன்னேற்றக் கழக அமைப்புக் கூட்டம், 9-10-49 ஞாயிறு காலை 9-மணிக்குத் தோழர். அப்பாண்டராஜன் அவர்கள் இலலத்தில் நடைபெறும. அதுபோது தி. மு. கழகத்தில் ஆர்வமுள்ளத் தோழாகள் அனைவரும் வந்து கலந்து கொளளும் படித் தோழர் தே. ச. அப்பாண்டராஜன் (அமைப்பாளர்) கேட்டுக் கொள்கிறூர்.

## ஏஜெண்டுகளுக்கு

அதிகப்படி பிரதிகள் தேவைப்படும் ஏஜெண்டுகள் முன் பணம் அனுப்பினலன்றி கவனிக்கப்பட மாட்டாது.

—"நிர்வாகி"

"மாலே மணி"
(திராவிடா கழகத் தினசரி)
வரு— சநதா 15—0—0
6 மாத ,, 7—8—0
3 மாத ,, 3—12-0

Printed & Published by T. M. Parthasarathy at the Mercantile Press, 2/45, Muthumari Chetty Street, Madras-1